Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
செங்கல்பட்டு, அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.எம்.சங்கரேஸ்வரன், பி.இ.,

ந.க.எண் 156/2007 மாஉதிகு

நாள்: 9.7.2008

பொருள்: திட்ட அனுமதி – பலமாடி மற்றும் பொது கட்டிடம் – மாமல்லபுரம் உள்ளூர் திட்டப் பகுதி – திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், முட்டுக்காடு ஊராட்சி, கழிப்பட்டூர் கிராமம் – சர்வே எண். 167/1, 2, 169/1எ1பி1, 1பி2, 1பி3, 170/1, 172/1, 2, 3, 4, 173/3, 4, 174/1, 2, 175/1, 2, 176/1எ, 1பி, 2, 1சி, 177/1, 2, 3, 179/1, 2எ, 2பி, 2சி, 183/2, 185/1, 186/2, 188/2எ, 2பி, 2சி, 189/2, 3, 190/1, 2, 3, 191/1, 2, 193/1, 2எ, 2பி, 2சி, 2டி, 194, 195, 196, 197/1, 2எ, 2பி1, 2பி2, 2பி3, 3எ, 3பி, 2சி. 3சி, 2டி, 2இ, 2எப்1, 2எப்2, 198/1, 2, 199/1எ, 1பி, 1சி, 1டி, 1இ, 2எ, 2பி, 2சி, 2டி, 2இ, 2எப், 2ஜி, 200/2எ, 2பி, 2சி, 2டி, 2இ, 2எப் மற்றும் 205–ல்75845.60 ச.மீ பரப்பு மனையில் பிளாக் 1 முதல் 6 வரையில் தரை அடித்தளம், தரைதளம், முதல் தளம், 2–ம் தளம் முதல் 29–ம் தளம் வரையில் 841 குடியிருப்புகள் பிளாக் 7–ல் தரைதளம் + 5 தளங்களில் கிளப் ஹவுஸ் கட்டிடம் கட்ட இசைவு அளிக்கப்பட்டது –திட்ட அனுமதி வழங்குதல் – குறித்து.

பார்வை:

1. மனுதாரர் திருவாளர்கள்.மாவாடி பிராஜக்ட் அண்டு கம்பெனி மனு நாள். 16.10.07, 21.2.08, 29.2.08 மற்றும் 19.3.08.
2. தலைவர், முட்டுக்காடு ஊராட்சி மன்ற கடிதம் எண்.15/07–08 நாள்9.10.07.
3. நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவக பலமாடி மற்றும் பொதுக்கட்டிம் ஆய்வுக்குழுமக் கூட்டம் கடிதட்ம இதே எண். நாள். 7.3.08.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை –2 அவர்களின் சுற்றறிக்கை எண்.9278/2007/பிஏ1, நாள். 25.8.07, 11.1.08 மற்றும் 13.2.08.
5. அரசாணை எண்.34, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [நவ 4–1] துறை, நாள்.25.1.08 மற்றும் 8.2.08.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை –2 அவர்களின் கடிதம் ந.க.எண்.1588/08/பிஏ2, நாள். 14.3.08.
7. மனுதாரின் மனு நாள். 14.3.08.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை –2 அவர்களின் கடிதம் ந.க.எண்.1588/08/பிஏ2, நாள். 4.4.08 மற்றும் 15.4.08.
9. மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் 110–வதுகுழும் கூட்டத் தீர்மானம் எண்.3
10. மனுதாரர் I & A கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய நாள்.8.7.08.

☆☆☆☆☆☆

ஆணை:

மாமல்லபுரம் உள்ளூர் திட்டப் பகுதிக்குட்பட்ட, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், முட்டுக்காடு ஊராட்சி, கழிப்பட்டூர் கிராமம், சர்வே எண். 167/1, 2, 169/1எ1பி1, 1பி2, 1பி3, 170/1, 172/1, 2, 3, 4, 173/3, 4, 174/1, 2, 175/1, 2, 176/1எ, 1பி, 2, 1சி,

177/1, 2, 3, 179/1, 2எ, 2பி, 2சி, 183/2, 185/1, 186/2, 188/2எ, 2பி, 2சி, 189/2, 3, 190/1, 2, 3, 191/1, 2, 193/1, 2எ, 2பி, 2சி, 2டி, 194, 195, 196, 197/1, 2எ, 2பி1, 2பி2, 2பி3, 3எ, 3பி, 2சி. 3சி, 2டி, 2இ, 2எப்1, 2எப்2, 198/1, 2, 199/1எ, 1பி, 1சி, 1டி, 1இ, 2எ, 2பி, 2சி, 2டி, 2இ, 2எப், 2ஜி, 200/2எ, 2பி, 2சி, 2டி, 2இ, 2எப் மற்றும் 205–ல்75845.60 ச.மீ பரப்பு மனையில் பிளாக் 1 முதல் 6 வரையில் தரை அடித்தளம், தரைதளம், முதல் தளம், 2–ம் தளம் முதல் 29–ம் தளம் வரையில் 841 குடியிருப்புகள் பிளாக் 7–ல் தரைதளம் + 5 தளங்களில் கிளப் ஹவுஸ் உபயோக பலமாடி கட்டிடம் கீழ்க்கண்டுள்ளவாறு அமைகின்றது.

Combined Stilt floor	–	20725.11 ச.மீ வாகனம் நிறுத்துமிடம்.
Combined முதல் தளப் பரப்பு	–	19438.03 ச.மீ வாகனம் நிறுத்துமிடம்.
பிளாக் 1–2–ம் தளம் முதல் 29–ம் தளம் வரை	–	26853.81 ச.மீ பரப்பில் 149 குடியிருப்பு (கட்டட உயரம் 91.4 மீட்டர்)

பிளாக் 2, 3, 4, 5 (Typical)

2–ம் தளம் முதல் 29–ம் தளம் வரை	–	98185.88 ச.மீ பரப்பில் 149 X 4 = 596. கட்டட உயரம் = 91.4 மீட்டர்.
பிளாக் 6– 2ஆம் தளம் முதல் 29–ம் தளம்வரை–		24504.84 ச.மீ பரப்பு–96குடியிருப்பு கட்டட உயரம் = 91.4 மீட்டர்.
பிளாக் 7– தரைத்தளம் முதல் 6–ம் தளம் வரை–		6267.19 ச.மீ பரப்பு–கிளப் ஹவுஸ், கட்டட உயரம் =28.9 மீட்டர்.
மொத்த குடியிருப்பு	–	149+596+96=841

மேற்படி இடத்திற்கான மனை ஒப்புதலுடன் கட்டிடங்களுக்கும் பார்வை 9–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் கடிதத்தில் இசைவு அளிக்கப்பட்டு பெறப்பட்டதை மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் 110–வதுகுழும கூட்டதில் பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் தீர்மானம் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்கண்டுள்ளவாறு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49(i) (ii) (iii)–ன் கீழ் திட்ட அனுமதி எண்.47(1 முதல் 37 வரை) /2008 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50–ன்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து 9.7.2008 முதல் 8.7.2011 வரை மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.

மேற்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடத்திற்கு தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997 (அரசாணை எண்.255 ஊரக வளர்ச்சித் துறை (சி2) நாள் 18.8.97)–க்கு உட்பட்டு கட்டிட உரிமம் வழங்கப்படல் வேண்டும் என உள்ளாட்சிக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) அரசாணை எண்.84, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.8.4.08–ன் படி 50% நிலுவை I & A கட்டணம் ரூ.7,10,27,500/–(ரூபாய் ஏழு கோடியே பத்து இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) உரிய காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.

2) EIA Clearance சான்று பெற்றுக்கொண்ட பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) கட்டட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிக்கான அணுகுவழி ஆகியவற்றை தானமாக பத்திரப் பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்படவேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும் நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகத்திற்கும் ஒரு வார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.

4) பொது ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அதற்கான அணுகுவழி ஆகியவற்றை நிறுவனத்தினர் ஊராட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்படவேண்டும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் [உண்மை நகல்] கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச மனையிடத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் இவ்வாணையின் நகல் ஒவ்வொரு வீட்டையும் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

8) சர்வே எண். 168, 178, 184, 192 ஆகியவற்றில் அமையும் அரசு புறம்போக்கு குளம், களம் மற்றும் குட்டை நிலங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது.

9) மேற்படி அரசு புறம்போக்கு குளம், களம் மற்றும் குட்டை இடத்திற்கு போக்குவரத்து பாதை வரைபடத்தில் உள்ளவாறு அமைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு தடை ஏதும் செய்யக் கூடாது.

10) அரசு புறம்போக்கு குளம் மற்றும் குட்டைகளில் கழிவுநீர் மற்றும் கழிவுகள் விடக்கூடாது.

11) மேற்படி அரசு புறம்போக்கு இடங்களுக்கு, பொது மக்கள் தங்குதடையின்றி சென்றுவர பொது பாதை மூலம் புழங்க உரிய உறுதி மொழிப் பத்திரம் உள்ளாட்சியில் ஒப்புதல் வழங்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

12) அரசு புறம்போக்கு இடங்களுக்கு குளம் மற்றும் குட்டைகளுக்கான நீர் வாத்தினை தடையேதும் செய்யக் கூடாது.

13) மனுதாரரின் நில உரிமம் குறித்து உறுதி செய்து கொண்ட பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

நிபந்தனைகள்:

1] உத்தேச பலமாடி மற்றும் தொகுப்பு வீடுகள் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2] வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

3] மனைஇ வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும். மற்றும் சமுதாயத் திறவிடங்கள் நிறுவனத்தினரால் பராமரிக்கப்படவேண்டும்.

4] தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்படவேண்டும்.

5] மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002–ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்படவேண்டும்.

6] உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7] மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

8] உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.

9) அரசாணை எண்.341/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் [ந.நி.1] துறை, நாள் 3.11.2004–ன் படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்படவேண்டும்.

உறுப்பினர் செயலர்,
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
செங்கல்பட்டு.

9/7/08

இணைப்பு
1] ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள் – 2 தொகுப்பு
2] I & A கட்டணம் குறித்து மனுதாரர் சமர்ப்பித்துள்ள உறுதிமொழி பத்திரம் நகல் } மேல் நடவடிக்கைக்காக.

பெறுநர்
தலைவர்,-
முட்டுக்காடு ஊராட்சி மன்றம்,
முட்டுக்காடு.

நகல்
திருவாளர்கள்.மாவாடி பிராஜக்ட் மற்றும் கம்பெனி,
22. மகராஜ் சூரியராவ் ரோடு,
ஆழ்வார்பேட்டை,
சென்னை–18.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate